# ஆத்ம ஜோதி



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
புதிய மேல்விமானம்.

# பொருளடக்கம்.


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | 125 |
| 2 | தாயசிந்னைக் களஞ்சியம் | 126 |
| 3 | அன்பும் அறமும் | 127 |
| 4 | மகாத்மாவின் மணிமொழிகள் | 132 |
| 5 | கண்ணன் வாழ்க்கை | 133 |
| 6 | ஒன்றுபடுத்தும் நாகரீகம் | 135 |
| 7 | சோதிட சாஸ்திரம் | 137 |
| 8 | நம் தாய்நாடு | 139 |
| 9 | ஆத்மசித்திக்கான சாதனங்கள் | 141 |
| 10 | நம்பிக்கையும் அர்ப்பணமும் | 143 |
| 11 | நாம் பிறந்ததன் பயன் | 145 |
| 12 | ஸ்ரீ நாகபூஷணியம்பாள் ஆலயம் | 148 |
| 13 | ஓம் நமோ நாராயணா | 149 |
| 14 | சாது டீர்பாவா அருள் | 151 |
| 15 | செய்தித்திரட்டு | 152 |
| 16 | பொன்மொழிகள் | 152 |





# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. | 75-00 |
| வருடச் சந்தா | ரூ. | 3-00 |
| தனிப்பிரதி | ச. | -30 |

"ஆத்மஜோதி" நிலையம். நாவலப்பிட்டி, (இலங்கை)

ஓம்

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே."—சுத்தானந்தர்.

சோதி 3 || விகிர்தி-ஹூ பங்குனி-மீ || சுடர் 5

## மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

தொடுக்குங் கடவுட் பழம் பாடற்
றொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்

தொடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்து நின்ற
வொருவன் றிருவுள்ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

# — தூயசிந்தைக் களஞ்சியம் —

[ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதியவர்கள் நூல்களிலிருந்து திரட்டப்பெற்றது.]

1 தினசரி படுக்கைக்குச் செல்லுமுன்பும் படுக்கையை விட்டு எழுமுன்பும் குறைந்தது 5 நிமிஷமாவது பரமனைக் குறித்துப் பிரார்த்தனை செய்.

2 பிரார்த்தனைகள் மிகுந்த ஆத்மீக சக்தி வாய்ந்த பிரவாகங்கள்.

3 கபடமற்ற பிரார்த்தனைக்குக் கைமேல் பலன் கிட்டும்.

4 முதலில் உலக க்ஷேமத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் பிரார்த்தனை செய். பிறகு உன் பொருட்டுப் பிரார்த்தனை செய்.

5 பற்றற்ற (அதாவது பலனில் இச்சை வைக்காத) பிரார்த்தனை முடிவில் மோக்ஷத்தையடையச் செய்யும்.

6 கடவுள் மனிதனைத் தன் சாயலாகப் படைத்தார்.

7 மனிதன் பூமியின் மீதுள்ள ஒரு திறன் வாய்ந்த பலம்.

8 மனிதனது முற்ற முடிந்த நிலை பூரண விடுதலை என்னும் மோக்ஷம.

9 இவ்வுலகில் உள்ள ஒரே உண்மைப் பொருள் கடவுள் ஒருவரே.

10 மதமென்பது மனிதருக்குள் உறையும் தெய்வீகத் தன்மையின் வெளித் தோற்றமே.

11 ஸ்திரீயானவள் பூமியிலுள்ள தெய்வ பலம்.

12 ஸ்திரீயைத் தெய்வத்தின் சக்தி என்றுணர்.

13 மனிதனது முதல் ஆசிரியன் ஸ்திரீயே ஆகின்றாள்.

14 ஒவ்வொரு ஸ்திரீயிலிடமும் தாயின் தன்மையைக் காண்.

15 ஸ்திரீயானவள் உயிருடன் கூடிய மாயை அல்லது சைதன்ய மாயையாவாள்.

# — அன்பும் அறமும் —

[ஆசிரியர்]

அன்பு பல கிளைகளையும் விழுதுகளையுங் கொண்ட ஆல மரம் போன்றது. ஆசை, வாஞ்சை, பாசம், நேசம், தயை, தாட்சண்ணியம், புண்ணியம், விருப்பம், இரக்கம், காதல், கருணை, அஹிம்சை, அருள், பக்தியாகிய பதங்களெல்லாம் அன்பின் வெவ்வேறு நிலைகளை விளக்கி நிற்கின்றன. அவை ஏனைய பல பதங்களைப்போல், ஒரே கருத்தைத் தரும் பல சொற்களல்ல. உலக ஆசை, சகோதர வாஞ்சை, புத்திர பாசம், நண்பர் நேசம், உறவினர் விருப்பம், தாயின் தயை, ஜீவகாருண்யம், கன்னியின் காதல், ஈசன் அருள், கடவுள் பக்தி என்பவை நித்திய வழக்கில் காணப்படும் சொற்றொடர்கள். இவற்றிலிருந்து, உடல்-உயிர் உலகு-இறை, தாய்-சேய், காதலன்-காதலி, கடவுள்-அடியார், முதலாய எல்லா உறவுகளுக்கும் அன்பே உள்ளமாயிருப்பதைக் காண்கின்றோம்.

உலகில் அன்பு இல்லாத இடமே கிடையாது. அஃதில்லையேல் நாம் வாழும் இந்த உலகம் ஒரு கணப்பொழுதுதானும் நிலைபெற்றிராது. நம்மைச் சுற்றிவுமுள்ள இயற்கை முழுவதும் அன்பையே பேசி நமக்குத் தினந்தினம் அன்பு மார்க்கத்தையே விளக்கி நிற்கின்றது. காலையில் புன்னகையுடன் தென்றலுக்கு மண விருந்தும் வண்டுக்குத் தேன் விருந்தும் அளிக்கும் நாண் மலர்களும், இளங்காற்றில் அசைந்தாடி நமது கண்களுக்குக் குளிர்ச்சி தரும் பசும் பயிர்களும், சூரியன் ஒளி வர இருள் நீங்கியதும் தங்கள் கூடுகளில் விழித்தெழுந்து வெளிவரும் புட்களின் சிறகடிப்பும், பாடல்களும், உயிர்களையும் பயிர்களையும் தழைக்கச் செய்தவண்ணம் செல்லும் நதிகளின் நீரோட்டமும், சமுத்திரத்தின் அலைகளும் சதா அன்பையே நமக்குப் புகட்டுகின்றன. விண்ணில் தோன்றும் இருபெருஞ் சுடர்களும் நட்சத்திரங்களும் காலந் தவறாது அன்புப் பணியே புரிகின்றன. இல்லறமாகிய நல்லறம் செவ்வனே நடப்பது காதல் அன்பால், மன்னறம் தழைப்பதும் நீதி செழிப்பதும் அன்பினாலேயே, அம்மட்டோ! உலகில் அருளறம் நிலைப்பதும் கடவுள்மீது மக்கள் காட்டும் அன்பினாலன்றோ!

அன்பின் ஆற்றலை அளவிடமுடியாது. அது அற்ப கூழை அமுதமாக்கும்; சிறு குடிலைப் பெரிய மாளிகையாக்கும். துன்பக் கணையைத் தடுக்க வல்லது அன்புக்கணையே. இன்னல்களைப் போக்கி இடர் களைவது அன்பே. வாழ்வில் வீரம் தருவதும் வெற்றியளிப்பதும் அன்பே. 'ஈர அன்பினர் யாதும் குறைவிலர் வீரர்' என்பது ஆன்றோர் வாக்கு.

அன்பின் படிகள் பல. தன்னல அன்பு, தன்குல அன்பு, தன் நாட்டன்பு, உலகப் பொது நல அன்பு, கடவுளன்பு என்பன ஒன்றிலிருந்து மனிதன் ஒன்றுக்கு மேலேறிச் செல்லும் பாதையைக் காட்டுகின்றன. தனித்து வாழ்ந்த ஒருவனின் அன்பு ஆரம்பத்தில் ஒருத்தி அன்புடன் இணைகின்றது. அடுத்த படியாக அவ்விருவர் அன்பு அவர்களிடம் குழந்தைகளிடம் செல்கின்றது. பின்னர் உற்றார் உறவினர்க்கு உறுதுணையாகின்றது. பிறகு ஊருக்கு நல்ல காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகிறது. அதன் பின்னர் ஊர்கள் பல சேர்ந்த நாட்டின் நற்சேவையில் அன்பு மகிழ்வடைகின்றது. அப்பால் உலகின் நன்மையே தன் சொந்த நன்மையாகக் கருதும் உயர்ந்த நிலையை அடைகின்றது. அனைத்திலும் தன்னையும், தன்னை அனைத்திலும் கண்டு பிறருக்குப் பயன் கருதாது செய்யப்படும் நற்கருமமே அறமென அழைக்கப்படும். நமது மனத்திலுள்ள மாசுகளை அறுப்பது அறம். கைம்மாறு வேண்டாது, புகழையும் பதவியையும் கருதாது, நாம் எவ்வளவுக்கெவ்வளவு உலகுக்கு உபகாரம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது அன்பு விரிவடைகிறது. பாச அன்பு பதி அன்பாக மாறுவது இந்த முறையிலாகும். அப்படி வளர்ச்சி பெற பாச அன்பு ஒரு நாள் துயரத்தையே தந்து நாசமாவது நிச்சயம். பதியன்பு ஒன்றே நமக்கு நற்கதி காட்டும்.

இக்காரணம்பற்றியே அநுபூதிச் செல்வர்களெல்லாம் இறைவனை அன்பே வடிவினனாகக் கண்டின்புற்றனர்; "அன்பே சிவம்," "உலகுக்குயிரானவன்காண்," "பல்லுயிர்க்கும் தாய் தந்தையான தயாபரன்" என கடவுளை வர்ணித்தனர். எல்லாச் சமயங்கட்கும் அடிப்படையான அன்பு மறைந்தபோதெல்லாம் மதங்கள் சீர்கேடடைந்தன.

திருமூலர் இக்கருத்தை அழகாய் விளக்கியுள்ளார் :

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்திலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமாய மர்ந்திருந்தாரே."

என்கிறார் அவர். "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்பது ஓர் சைவப் பெரியார் வாக்கு. ஔவையார் அருளிய திருக் குறளிலும், "எல்லாவுயிரையும் ஈசனெனக் கருதின், நில்லாதே வீசனிலைத்து," 'ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும் நேசத்தாற் பார்த்துக் கொளல்" என அருளி இருத்தலைக் காண்க. எல்லா சீவராசிகளிடத்திலும் தெய்வத்தன்மையுள்ளதென உணர்ந்து அன்பு செய்வதே உண்மையான அன்பாகும்.

மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவிக்கும் நிலையை அடைதற்கு இதுவே சாதனமாகும்.

உலகில் அன்புண்மைக்கு அறிகுறியாக விளங்குவது வளர்ச்சியே. வளர்ச்சியற்ற உலகம் இருக்கவே முடியாது மலை, மரம், பட்சி, விலங்கு முதலாய அஃறிணை உலகும், மக்களைக்கொண்ட உயர்திணை உலகும் வளர்ந்தவண்ணமேயுள்ளது. இந்த வளர்ச்சியைத் தூண்டும் பண்பு அன்பினிடத்திருந்தே வருகின்றது. மனிதப் பிறவி விழுமியதெனக் கூறப்படுவதற்குக் காரணம் இந்த அன்பு வளர்ச்சிக்குரிய அரிய வாய்ப்பை அது ஒன்றே பெற்றிருப்பதினாலேயாம். ஓரறிவுள்ள மரம் முதல் ஆறறிவுள்ள மனிதன்வரையில் எல்லாம் இன்பத்தையே நாடுகின்றன. ஐயறிவுள்ள விலங்குகள் உண்டு, உறங்கி, கூடி இனத்தைப் பெருக்குவதுடன் நின்றுவிடுகின்றன. மனிதன் அவ்வித புலனின்பத்துடன் திருப்தியடைவதில்லை. அவனுக்கு மனம் முதலாய அந்தக் காணங்கள் உள. அவற்றையெல்லாம் தாண்டி நிற்கும் உள்ளத்தில் வதியும் அந்தராத்மாவை அறிந்து அது பரம் பொருளுடன் இரண்டறக் கலக்கும்போது பெறும் பேரின்பமே மனிதப் பிறவியின் உன்னத லட்சியமாகும்.

இந்த லட்சியத்தையடைய முயல்பவர்களுள், இயற்கையான முறையில் இல்வாழ்க்கை நடத்துபவனே தலைசிறந்தவ

னெனத் தமது சொந்த அநுபவங்கொண்டு விளக்க வந்த திருவள்ளுவர்,

"அன்பும் அறனுமுடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனுமது." —எனச் சுருக்கமாய்க் கூறிவிட்டார். இவ்வுலகத்திலேயே தெய்வத் தன்மையைப் பெறுமாறு வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி ! என்ற கேள்விக்கு, அன்பும் அறமும் பொருந்திய இல்லற வாழ்க்கைப் பேணி, நன்றிக்கு வித்தான நல்லொழுக்கத்தைப் போற்றி, பழி, பாவம், பகைவிலக்கி, உள்ளத்தால் பொய்யாது ஒழுகினுல்போதும் என்பதே அவர் தந்த விடையாகும். மேலும், சத்தியத்திலும் உயர்ந்த அறம் இல்லாமையால், மனம், வாக்கு, காயம் மூன்றிலும் பொய்யாது வாழ்பவர்கள் வேறு ஒரு அறமும் செய்ய வேண்டிய தேவையற்றவர்களெனவும், பேராசை, பொறாமை, கோபம் முதலாய மாசுகளை மனத்திலிருந்து ஒழிப்பதே நல்லறமென்றும் ஏனையவையெல்லாம் வெறும் பகட்டு எனவும் வற்புறுத்திவிட்டார். இத்தகைய அறத்தினுல் எய்தும் வாழ்வுப் பயனே அழியாத இன்பமாகும். திருவள்ளுவர் கண்ட இந்த நெறியில் அன்பு மனமாசைக் கழுவும் கருவியாகிறது ; மனமாசற்ற நிலையே அறம் ஆகிறது. எனவே, அறத்தை விளங்கவைப்பது அன்பு என்பது வெளிப்படை.

இவ்விதம் வாழ்க்கைக் கலையை அன்பால் தெளிந்த அறத்தின் அடிப்படையில் எழுப்பிய பழந்தமிழர், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உயர்ந்த கொள்கையைக்கொண்டிருந்தனர். பின்னளில் தோன்றிய சாதி மதப் பிரிவுகள், பொறாமைகள், போட்டிகள், போர்கள், கண்மூடி வழக்கங்கள் பழைய செந்நெறிக்குக் கேடு சூழ்வித்தன. ஆயினும், "உலகம் ஒரு குலம்" என்ற தமிழனின் குறிக்கோள் அறிஞரின் உள்ளத்தைவிட்டு முற்றிலும் மறையவில்லை. விஞ்ஞான முதிர்ச்சியில் கிடைத்துள்ள அறிவு அந்தக் குறிக்கோளை நோக்கியே யாத்திரை செய்கின்றது. இன்று நாம் 'புதுஉலகம்,' 'உலக சமஷ்டி அரசாங்கம்,' 'ஐக்கிய தேச சபை, முதலாய புதுப் புது இயக்கங்களைப்பற்றி அடிக்கடி படிக்கின்றோம். உள்ளது சிறத்தல் (Evolution) என்பது உலகின் இயற்கையான வளர்ச்சியாகும். அதற்குக் கடைகள் நேரிடும்போது, அவற்றைக் களைந்தெறிய

இயற்கை செய்யும் முயற்சியை நாம் புரட்சியென அழைக்கின்றோம். சகோதரத்துவம், சமத்துவம், பொதுமை, என்பவையெல்லாம் இப்புரட்சியின் லட்சியங்களாகும்.

புதிய நல்ல உலகை மூர்க்கப் புரட்சியால் படைக்கமுடியாது, அதற்கு வேண்டப்படுவது அறப்புரட்சியென்ற அரிய உண்மையை இருபதாம் நூற்றாண்டில் உலக வல்லரசுகளுக்கு வற்புறுத்திய பெருமை காந்தியடிகளைச் சார்ந்ததாகும். இந்த அறப் புரட்சியே காந்தீயம் என்ற பேர் கொண்டு உலகில் இன்று பரவிவருகின்றது. துவேஷத்தையும் அதனால் விளையும் போரையும் மூர்க்கத்தையும் கருவிகளாகக்கொண்ட பொதுவுடமைப் புரட்சி பின்னரும் மூர்க்கத்தையும் பகையையுமே வளர்த்துப் போரிலேயே முடியுமென்பதும், அதனால் உலகில் அமைதியை நிறுவமுடியாதென்பதும் காந்தீயத்தின் அடிப்படையான கொள்கைகளாகும். நமது பழைய "புராணங்களும் இதிகாசங்களும் போதித்துவந்தது இதே தத்துவத்தையாகும். உதாரணமாக இராமாயணத்தை எடுப்போம்.

ராசாதி ராசனான இராவணன் ஆண்ட இலங்கையின் மணி நகரில் மெல்லிய தென்றல் தவழ்ந்ததேயன்றி, காற்று வேகமாக வீசியதேயில்லையெனவும், சூரியனின் வெம்மையும் யமனின் கொடுமையும் புகுவதில்லையெனவும் வர்ணிக்கத் தொடங்கிய கம்பநாடார் அவ்விதம் நாகரிக உச்சியில் நின்ற அரசு அழிந்து மறைந்த காரணத்தையும் அதே இடத்தில் வர்ணித்துள்ள அழகைப் பாருங்கள் :—

" கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்புகா இனி வானவர் புகார் என்!கைவம்பே
திறப்பு காலத்துள் யாவையும் சிதையினுஞ் சிதையா
அறம் புகாது அந்த அணி மதிற் புறத்து நின்று அகத்தின்."

வயிறார உண்டு, பசியும் நோயுமின்றி, கவலை யென்னும் கடும் பிணியையும் வேரறுத்து மக்கள் வாழ்ந்த இலங்கை மாநகரில், அழியாத் தன்மை பொருந்திய அறம் சென்று அடையவில்லையாம். அழியுந் தன்மை வாய்ந்த இவ்வுலகில் என்றும் அழியாது நிற்பது அறம் ஒன்றேயாகும் என்ற பேருண்மையை கம்பர் விளக்கிய அற்புத முறையை உற்று நோக்குக. அற

நெறிக்கு மாறாக ஒருவன் தேடும் பொருளும்," அதனால் அவன் பெறும் இன்பமும் பெருகி வளர்வனபோலத் தோன்றினும், சின்னாளிற் பொன்றி ஒழிந்தே போகும் என்பதற்கு இராவணனின் இலங்கை மாநகரே இணையற்ற சான்றாகும். ஆகையால்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல."

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

என்ற வள்ளுவர் வாக்கை உள்ளத்தில் பதியச் செய்து வாழ்வை நடத்துவோமாக!

# மகாத்மாவின் மணிமொழிகள்

1 சத்தியமே கடவுள்; கருணையும், கருணையின் சாதனங்களுமே கடவுளைக் காட்டும் கருவிகள்.

2 ஸர்வம் ஈஸ்வரமயம் என எண்ணுபவர்கள் எந்தத் தொழில் செய்வதையும் பிரார்த்தனையாக நினைப்பர்.

3 மனதிலும், பேச்சிலும், செய்கையிலும் உண்மை இருக்கவேண்டும். இவ்வுண்மையை நன்றாக அறிந்தவனுக்குத் தெரியவேண்டியது வேறொன்றுமில்லை.

4 அஹிம்சை பல நற்குணங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. மன்னிப்பதின் உச்ச ஸ்தானம் அஹிம்சையே.

5 உழைத்துத்தான் மனிதன் உயிர்வாழ வேண்டும் என்பது ஈஸ்வர நியதி. எல்லாருமே தத்தம் உணவைப் பெற உழைப்பில் ஈடுபடுவார்களானால் வகுப்பு வேற்றுமைகள் அழிந்துபோகும்.

6 உங்கள் எதிரிகளை நீங்கள் அன்பினால் வெல்லுங்கள். அன்பினால் சகலமும் நிறைவேறுகின்றது.

# கண்ணன் வாழ்க்கை

[சுத்தானந்த தாசன்]

“கண்ணன் வாழ்க்கையும் கீதையும் காசினிக்கெல்லாம்
திண்ணமாநலஞ் செய்திடுந் தீரவாழ் வளிக்கும்.”

கண்ணன் வாழ்க்கை, கற்றோரும் மற்றோரும் உயரிய தத்துவங்களையெல்லாம் இலகுவில் விளங்கவைப்பது. கண்ணன் வாழ்வில் கடைந்தெடுத்த சாரமே கீதை. கீதா கீதா கீதா கீதா என்று இடைவிடாது உச்சரித்தால் அந்த ஓசையே மக்களுக்குத் தாகீதாகீ என்றாகித் தியாகத்தை அறிவுறுத்துகிறது. இறைவன் ஒருவனுக்காக மற்ற இன்ப நலன்களையெல்லாம் தியாகம் செய் என்பதே அதன் கருத்து.

“பற்றற்று வாழ்” என்கிறது கீதை. இறைவனிலே மாத்திரம் பற்றுக்கொண்டு இறைவனுக்குப் புறம்பாயுள்ள மற்றையவற்றின் மேலுள்ள பற்றை நீக்கு என்பதே அதன் பொருள். வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார்.

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு”

ஒருவன் பற்றுவிடவேண்டுமானால் பற்றற்றான் பற்றினையே அவன் விடாது பற்றவேண்டுமென்பது கருத்து. எல்லாப் பற்றுக்களையும் விட்டவர் இறைவனருளையே பற்றி நின்று அழிவில்லாத இன்பம் எய்துவர். எல்லாப் பற்றுக்களையும் விட்ட காரைக்கால் அம்மையார் இறைவன் தாள் ஒன்றையே பற்றி நின்ற காரணத்தை அறிவோருக்கு இது நன்கு புலப்படும்.

“பற்றற்றுக் கருமஞ்செய் பலனை எதிர்பார்க்காதே.” என்கிறது கீதை. கர்மம் பிறப்பிற்கு வித்து. பற்றுள்ள கர்மமே அப்படிப்பட்டது. பற்றற்ற கர்மம் வீட்டு நெறியை அளிக்கும்.

சுருங்கச் சொல்லின் ‘நான்’ எனதற்ற பூரண சரணாகதியே கண்ணன் காட்டிய வழி. அதுவே சமத்துவம். உலகில் சமத்

துவம் சமரசம் பேசுவோர் உடலளவில் நின்றுவிடுகின்றனர். அவர்கள் பேச்சும் உடல்மாய மாய்ந்துவிடுகின்றது. உள்ளத்தையோ ஆத்மாவையோ பேசுகிறார்களில்லை. அறிகின்றார்களில்லை.

"வெற்றி தோல்வி, விருப்பு வெறுப்பு,
வெம்மை தண்மை விகற்பங்களின்றிப்
பற்றுநீங்கிப் புலன்விழைவின்றிப்
பழுதறப் பணிசெய்வது யோகம்;
முற்றும் உள்ளச் சமத்துவம் யோகம்
மூளையைக் கலக்கும் புலனைந்தைச்
சுற்றுச்சுற்று மனத்தைச் ஜெயித்தே
சேமநல்லறஞ் செய்பவர் மேலோர்."

—சுத்தானந்தர்

பணிசெய்வது யோகம்; உள்ளச் சமத்துவம் யோகம்; மனத்தைச் செயிப்போர் மேலோர். இதுவே கண்ணன் வாழ்க்கையும் அவன் உலகுக்குக் காட்டிய வழியுமாகும்.

### என்னில் அடங்கும்

"வானிலே யடங்கும் வளிபோலே
வையம் வாழுயிர் என்னில் அடங்கும்
யானென் மாயையால் ஆக்கி யழிப்பேன்
யானிலா தில்லை யாங்கணு மெஃதும்
எனப்பாவியும் உய்வனென் அன்பால்
என்னை நினைந்தெனக்கே யனைத்துஞ் செய்
அன்னை! அன்பன் அழிவுற மாட்டான்;
அன்புனின் பொறுப் பென்பொறுப்பாகும்."

### எல்லாம் யானே!

"முதலிடை கடை முற்றிலும் யானே
மூன்று கால நிகழ்ச்சியும் யானே;
உயிர்களைத் தாங்கிடுந் தன்மைகள் யானே
சர்வபூத மூலவசனும் யானே;
இதயந் தோறும் இருப்பவன் யானே
இயற்கையான பொருள்களும் யானே;
அதிசயச் சிறப் பென்னிற் பாகும்
அகிலமெல்லாமென் அம்சமொன்றேயாம்."

—சுத்தானந்தர்

# ஒன்றுபடுத்தும் நாகரிகம்

[தென்னுப்பிரிக்கா டர்பன், திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு விதமான நாகரிகம் இருக்கிறதென்பது உலகமறிந்த விஷயம். எல்லா நாகரிகங்களையும் கூட்டிக் குழைத்து திவ்யமான புதிய நாகரிகம் சமைக்கவேண்டும். அவ்விதம் சமைக்கப்பட்ட நாகரிகம் உலகுக்கெல்லாம் பொதுவாக அமையவேண்டும். உலக ஜனங்கள் இதுவரையில் கண்டிராதவாறு புத்தி சாதுரியத்துடன் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டும் வாழவேண்டும். அம்மாதிரியான தலைமுறையை சிருஷ்டிக்க இன்று முதல் உழைக்கவேண்டும். கீழ் நாடுகளெல்லாம் வேதாந்தத்திலும், ஆன்மீகத் துறையிலும் அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவென்பது உண்மைதான். ஆயினும் மேல்நாட்டு மக்களுக்கு இருக்கும் பல சிலாக்கியமான குணங்கள் கீழ்நாட்டு மக்களுக்கு இல்லை என்பது நிதர்சனம்.

மேல்நாட்டு மக்களிடையே காணும் உத்வேகமும், சுதந்திர தாகமும், தன்னம்பிக்கையும், சகிப்புத் தன்மையும், காரியங்கள் செய்வதில் சாதுரியமும், கட்டுப்பாடும், கீழ்நாட்டு மக்களிடையே காணமுடியாது. இந்த குணாதிசயங்கள் கீழ்நாட்டு மக்களுக்கும் ஏற்படவேண்டும். ஆன்மீக ஞானத்துடன் மேற்கூறப்பட்ட குணங்களும் கலந்து கீழ்நாட்டு மக்கள் திகழவேண்டும்.

இன்று இந்த உலகமெங்கும் மேல்நாடுகளுக்குச் செல்வாக்கு மிகுந்திருக்கிறது. இதற்குக் காரணமென்ன? மேல்நாட்டு மக்கள் இயற்கை சாஸ்திரங்களை நன்ருக அறிந்து அவைகளின் உதவியால் இயற்கையின் பஞ்சபூத சக்திகளை பிரயோசனப்படுத்திக்கொள்ளும் சக்தி வாய்ந்திருக்கின்றனர்.

ஆனால், கீழ்நாடுகள் ஆன்மீகத் துறையில் மாத்திரம் வாழ்க்கையை அமோகமாக அபிவிருத்தி செய்துகொண்டன. லோகாயதத் துறையை முற்றும் அலட்சியம் செய்துவிட்டன. அதனால்தான், இப்பொழுது மேல்நாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்

கும் சந்திக்கமுடியாத இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. மேல்நாடுகள் ஓர் துறையிலும், கீழ்நாடுகள் மற்றொரு துறையிலும் அபிவிருத்தியடைந்திருப்பதால் இரண்டும் இரு தனிக்காட்டு ராஜாக்களாகவே விளங்குகின்றன.

இந்த வித்தியாசத்தை சீர்தூக்கிப் பார்த்தால் மேல்நாடுகள், ஆன்மீகத் துறையில் கீழ்நாடுகளின் வேதாந்தங்களைக் கற்க வேண்டும் என்பதை உணருவோம். கற்றாலொழிய விமோசனம் ஏற்படாது. கீழ்நாடுகளும் மேல்நாட்டின் லோகாயத அபிவிருத்திகளை பின்பற்றி பயிற்சி பெறவேண்டும். இல்லாவிட்டால் அபிவிருத்தியடையவே முடியாது.

இனி இந்த உலகத்தில் சர்வ தேசத்திற்கும் பொதுவான நாகரிக சீர்திருத்தம் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். இல்லையெனில், உலகம் அழிந்துபோகும். பழைய காலங்களில் ஒவ்வொரு தேசமும் கிணற்றுத் தவளைபோல் இருந்தது. அக்காலம் மலை ஏறிவிட்டது. ஆசியாக் கண்டம் தனியாக இருந்து கொண்டு "என்னுடைய வேதாந்தத்திற்குச் சரிநிகர் சமானம் உலகத்தில் வேறு ஏது?" என்று இனி ஜம்பம் அடித்துக் கொள்ளமுடியாது.

வருங்காலத்தில், சர்வதேச ஜனங்களும் எதை பெரிதெனக் கருதுகின்றனரோ அதுவே பெரிதாக விளங்கும். ஆகவே, ஆசியாக் கண்டத்து மக்கள் ஒரு முக்கியமான பாடம் கற்றாக வேண்டும். அது என்னவெனில், வேதாந்தத்தை உலக மக்களுக்கு உபதேசம் செய்து அனைவரையும் வேதாந்திகளாக்க வேண்டும். இல்லையெனில், நமக்கும் அந்த வேதாந்தம் தேவையில்லையென்று விட்டுவிடவேண்டும்.

சின தேசத்துப் பெரியார் ஒருவர் சொன்னார், "மேல்நாடுகளிலே ஆலயங்கள் தோன்றவேண்டும். அந்த ஆலயத்தின் மணியோசையைக் கேட்டு மக்கள் மனம் சாந்தியடையவேண்டும். ஆவேசம் குறையவேண்டும். ஆனால், கீழ்நாட்டு மக்களுக்கோ சங்கநாதம் கர்ஜிக்கவேண்டும். அந்த ஓசை கேட்டு அவர்கள் துள்ளி எழவேண்டும்."

இன்று உலகமெங்கும் யுத்த ஆவேசம் வீறுகொண்டிருக்கிறது. அந்த ஆவேசத்திலிருந்துதான் மானிடர்கள் ஆன்மீக

# சோதிட சாஸ்திரமும் சைவசமயக் கிரியைகளும்

[ச. ப. ஷண்முகசுந்தர சர்மா, டிக்கோயா.]

சோதிட சாஸ்திரமானது, இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், ஆகிய நால்வேதங்கட்கும், ஆறங்கமாயுள்ள, சாஸ்திரங்களுள், ஒன்றாகும். இதனை வேத புருஷனது கண்களென நம் மூன்னோர் கூறிப் போந்தார்கள். இச்சாஸ்திர நூலானது வடமொழியிலே, கணிதஸ்கந்தம், முகூர்த்தஸ்கந்தம், ஜோதிஷஸ்கந்தமெனப் பலவேறு பகுப்புகளைக்கொண்ட பெருங் காப்பியமாகவுள்ளது. இவற்றை தற்காலம், சிறுசிறு நூல்களாகத் தமிழ் மொழியில் யாத்து பல பேரறிஞர்கள் தந்துள்ள போதிலும், இதனை நன்கு கற்றறிந்து சோதிட பலன் சொல்லவோ, முகூர்த்த நிர்ணயஞ் செய்யவோ, முடியாத நிலையில் சைவர்களாகிய நாம் இருக்கிறோம். இதற்கேற்பத் தற்கால பஞ்சாங்கங்களும் பலவித வேற்றுமைகளுடன் வெளியாகின்றதால், சைவமக்களது கிரியா சம்பவங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் சந்தேக விபரீதங்களையும் உண்டுபண்ணிவிடுகிறது.

எங்கள் சைவக் கிரியைகளில் எதுவாயிருந்தாலும், அக்கிரியைகள் யாவும், நல்ல சுபமுகூர்த்த காலவிசேடங்களிலேயே தொடங்கவேண்டும், செய்தல்வேண்டும், எனச் சைவசாஸ்திரங்கள் கூறுகின்றன; சிவாகமங்கள் கூறுகின்றன; சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. பகவத் கீதையிலே பகவான் கூறியருளியுள்ளார். அவையாவன :—

ஆகமங்களிலே :—

"சுருத்யாகமேன மமைவாக்ஞாயஸ்தாமுல்லங்ய வர்த்ததே!
ஆக்ஞாபேதீமமத்ரோஹீ நசைவோ பக்தி மாநபி, க்அதாயுர்
நரகேகோரேலஸெத்கல்ப்பசதத்ரயம்."

---

ஞானம் பெற்று சகோதரர்களாக வாழக்கூடிய மதம் தோன்றப் போகிறது அப்பேர்ப்பட்ட நல்ல காலம் இன்னும் வெகு தூரத்தில் இல்லை என்றே அபிப்பிராயப்படுகிறோம்.

அதாவது: வேதாகமங்கள் எனது கட்டளை, யாரொருவர் அவற்றை மீறியோ அல்லது நிந்தித்தோ கொள்ளுகிறார் களோ அவர்கள் எனது ஆஞ்ஞையை மீறி நடந்தவர்களாவார் கள். அவர்கள் எனது துரோகிகள், சைவசமையிகள் அல்லர். இப்படிப்பட்டவர்கள் மிகவும் கொடுமையான நரகத் துன்பத்திலே கிடந்து வருந்துவார்கள் என்பதாம்.

சிவஞானசித்தியாரிலே:

"அருளினானுரைத்த நூலின் வழிவாராத்தன்மஞ் செய்பினி ருளலாம், நரகத்துன்பத்திட்டிரும் பாவந் தீர்ப்பா" னெனக் கூறியமை காண்க:

பகவத்கீதையிலே,

"யஸ்சாஸ்த்ர விதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததெகாமசாரத, நஸ ஸித்திமவாப் நொதி நசுகம் நபராங்கதிம், ஞாத்வாசாஸ்த்ர விதா னோக்தம் கர்மகர்த்துமிகார் ஹஸி."

அதாவது: சாஸ்திரவிதியைக் கடந்து இஷ்டம்போல் செய்ப வன் முத்தியடையான்; அவனுக்கு நற்சுகமும் நற்கதியும் கிடைக்கமாட்டாது: ஆதலால் சாஸ்திரவிதிகளை யறிந்து அநு சரித்து கருமஞ் செய்க.

ஆகவே, சைவ மக்களெல்லோருக்கும், இறைவனால் அநுக் கிரகிக்கப்பட்ட நான்குவிதமான தொண்டு நிலையில் கிரியாபாத நிலையே மிகமிக முக்கியமானதும், போகமோக்ஷமிரண்டிற்கும் அநுகூலம் தரக்கூடியதாய் இருந்தாலும், எமது சமய குரவர் களும் நாயன்மார்களிற் பலரும், இன்னும் ஏனைய சைவப் பெரி யார்களும் சொல்லினும் செயலினும் காட்டிப்போந்தார்கள். நாமும் அங்ஙனமே இனிமேலாவது, நித்தியம், நைமித்திகம், காமியம் எனச் சொல்லப்படும் மூவகையான கிரியாமுறைகளில் எமது இயல்பு நிலைமைக்கேற்றவாறு நல்ல சாஸ்திரோக்தமான சுபமுகூர்த்த கால நேரத்தில் இயன்றதை அநுஷ்டித்து இறை வனருளைப்பெற்று எமக்கும் எம்மனோருக்கும் நன்மை பயக்கக் கூடிய வழியைக் கடைப்பிடிப்போமாக.

"வாழ்க சைவநெறி வாழ்க சைவகுலம்
வாழ்க சைவ சின்னங்களுமே—வாழ்கவென்றும்
தந்திமுகனுருந் தந்தையும் பார்வதியுந்
தந்த முருகருமருள் வார்காண்."
"ஸர்வம் சிவமயம் ஜெகத்"

முற்றொடர்ச்சி

# நம் தாய் நாடு

பிரமசாரி சோமசுந்தரம்

அறஞ்செய்யும் இப்பெரிய நிலையில் எங்களைக் கடவுள் வைத்ததால் யாம் அவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம். வழங்கும் கொடையைப் பெறும் மக்களுக்கு மென்மேலும் நன்றியுடையவராகி இருக்கவேண்டும். உய்வழியாகும் அற நெறியைக் காட்டியுள்ளார்கள் இவர்கள். முத்தி நெறிக்கு முதற் பெரும் வித்தாகும் இவ்வழி, யோகத்துள் பெரும் யோகமாம் இது.

"அறத்தான் வருவதே இன்ப மற்றெல்லாம்
புறத்த புகழுமில." —குறள்

சுரும குணம் வாய்ந்து பிறந்த பெருமக்களையன்றோ கடவுளின் அம்சமென நமது மூதோர் வாக்கியங்கள் கூறுகின்றன.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்," என்னும் ஞானவழியில் வந்தவர்கள் நாமல்லவா? இறைவனை நினைந்து நெக்கு நெக்குருகி நெஞ்சம் குழைந்து உயிர்கள் அன்பு நெறியைப் போற்றுவதற்கு, வானளாவிய ஆலயங்கள் அளவிலா விளங்குவது இந்நாட்டில். கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண் டாம் என்னும் பழமொழியைப் போற்றி வாழ்ந்த நன்னாடு நம் நாடேயாகும். இக்கோயில்களின் பெருமையைக் கூறமுடியுமா? தில்லைத் திருக்கோயில், மதுரைத் திருக்கோயில் திருமயிலை திருக் கோயில், காஞ்சிக் கோயில் இவைகள் காட்சியாய் நிற்கின்றன. இதைவிடப் பற்பல விஷ்ணு கோயில்களும் நாடெங்கும் விளங்கி நன்மை தருகின்றன. காலையில் விழித்தெழுந்த கணத்தே, திருமயிலைக் காபாலீசுவர கோபுரம்தான் எம் கண் பார்ப்பது. கோவிலில் அடிக்கும் மணியின் ஓசை மனத்தை இழுத்து இறைவனடி சேர்க்கின்றது. உற்சவங்களின் நன் மையை யுரைக்கவேண்டுமா நித்தியபடி பூஜைகள் விசேஷமாக

நடக்கும். வேத பாராயணம், தேவாரப் பதிகம் பாடல், நாத சுரத்தோடு ஒவ்வொரு சுவாமி சந்நதியில் தினந்தோறும் தீபாராதனைகள் நடக்கும். நித்திய பூஜைகளும், மாத உற்சவங்களும் வருடாந்தரம்முறையுடன் நடாத்தப்படும். உதாரணமாக, நவராத்திரி ஒன்பது நாளும் காலை மாலையாக பூஜை ஒன்பது நாளும் கொலுமண்டபத்தில் அம்மன் விசேஷ அலங்காரத்துடன் கொலுவீற்றிருத்தல், இந்த ஒன்பது நாளும் மேளக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, உபநியாசங்கள், வேத பாராயணம், தேவார பாராயணங்கள் நடைபெறும். சமய விஷயமாக ஒன்பது நாட்களும் சொற்பொழிவு நடாத்துவதற்கு ஏற்பாடுகள் இன்றும் இருந்து வருகின்றது. இந்த அற்புத நாட்களில் தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் கோவிலில் பாடுவதற்குப் பற்பல இடங்களிலிருந்து தேவார திருவாசகம் ஓதவல்லாரை வரவழைப்பார்கள் இவர்கள் இதற்கென அமைத்த மண்டபத்தில் அமர்ந்து நாயன்மார்களின் அரிய பாடல்களைக் கனிவுடன் பாடி இன்னிசை பரப்புவார்கள். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் பாடல்களும், நாவிற்கரையரின் நற்றமிழும், மணிவாசகர் திருவாசகமும் கேட்போர் மனதைக் கரைத்து, மலத்தைக் கெடுத்து, அருட்டேனைச் சொரியும்.

நம் இலங்கையில் கோயில்களுக்கு யாதொரு குறையுமில்லை. ஆனல், இத்தேவாலயங்களில் வேறு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. காலத்திற்கேற்றவண்ணமும் இடத்திற்கமைந்தவிதமாகவும் தர்மமுறையில் யாம் சிலபல திருத்தங்கள் செய்யவேண்டும். வாணம் ஏற்றுவதிலும், தாளந்தட்டி மேளங்கொட்டுவதிலும் அநேக பணம் இலங்கை மக்கள் செலவிடுகின்றனர். தலையாட்டிக் கண்ணை மூடிக் கோலங்காட்டிக் கும்பாளம் கொட்டும், அகந்தூய்மையும், ஆண்டவன் பற்றும் அணுவளவில்லா, நடனமாதர்க்குக் கொட்டும் பணத்தை வேறு தர்ம நெறியில் செலவிடலாம். பைரவி ராகத்தில் பரவசங்கொள்கிருர்கள். காம்போதி ராகத்தைப் பெருஞ் சுவையுடன் கேட்க வருவோர் பதினயிரம் நாதஸ்வரத்தின் நாகவராளி கேட்க நாலாயிரம்பேர் வருகிருர்கள். வேடிக்கை பார்க்க எத்தனைபேர், விநோதம் பார்க்க எத்தனைபேர். தேவார திரு வாசகங்களுக்கு மரியாதை கொடுத்துக் காதலிப்போர் எத்தனைபேர்.



[தொடரும்]

முற்றொடர்ச்சி

# ஆத்ம சித்திக்கான சாதனங்கள்

ஸ்ரீ சுந்தரம்மாள் ராகவாச்சாரி

இயற்கைப் பிரகிருதியின் பரிணாமமுறைகளின் நிகழ்ச்சிக் கிரமம் என்பது எளிதில் அவன் மனதில் விளங்குவதில்லை. அச்சத்தினால் பீடிக்கப்படாது மனோதைரியத்துடன் மனிதன் வாழவேண்டின் மூன்று விஷயங்களை அவன் நன்கு உணர்ந்து மனதில் நிலைநாட்டிக்கொள்வது அவசியம்:— வீண் பயத்தினால்மட்டுமே நிலையற்ற நடவாத காரியங்கள் நடந்ததாகவோ, நடக்கப்போவதாகவோ, மனதில் தோன்றவல்லவை அதற்கு மனிதனே காரணம் என்பது முதலாவது. எதிர்பாராதபடி தற்செயலாக ஒரு விபத்தோ, துன்பமோ நேருமிடத்து, அதை மனத்துணிவுடன் எதிர்நின்று முகங்கொடுத்துச் சகிப்பதே மனிதத் தனம் என்பதையும், அப்படிச் செய்வதனால் அத்துன்பத்தின் கடுமையும் கொடுமையும் சகிக்கும்படியான அளவிற்குக் குறைந்து காணுமென்பதையும், உணரவேண்டியது இரண்டாவது; விபத்துக்கள் (துரதிர்ஷ்ட விளைவுகள்) மனிதனுக்கு புத்தி புகட்ட வல்ல நிகழ்ச்சிகள்; நல்லதிர்ஷ்டமே எப்பொழுதும் இருந்து வந்தால் தெரிந்துகொள்ளக்கூடிய நற்புத்திகளைவிடச் சிறந்த பாடங்களையும், ஆத்ம ஞானத்தின் அதிசயமான மாண்பையும் அறிவிக்கவல்லது துரதிர்ஷ்ட விபத்து. ஜீரணம் எளிதில் ஆகக்கூடாத ஒரு உணவுப் பொருளை உண்டதனால் ஏற்படும் வயிற்று வலியை அனுபவித்தால்மட்டுமே நாம் உண்ணத் தக்கவை இவை, தகாதவை இவை என்ற வேறுபாட்டை அறிகிறோம். பிற்காலத்துத் தேகச் சுகாதார நிலைமைக்கு நல்லதோர் பாடங் கற்பிக்கப்படுகிறது. ஆகவே, நம்மால் தடுக்கக் கூடாத ஒரு சம்பவம் நேருவதைத் தடுத்து எதிர்ப்பது பயனற்ற காரியம். அதை அனுபவித்துத் துன்பத்தைச் சகித்து மீளுதல் உயர்ந்த பாடங் கற்றலாகும்.

அஞ்ஞானத்தினால் உண்டாவது அச்சம் என்பது தெளிவு. தன்னயமே கருதும் சுபாவத்தின் விளைபொருள்களில் அச்சமும்

ஒன்று. "பரிசுத்தமான பரிபூரண அன்பு (Perfect love casteth out fear) அச்சத்தை அகற்றும்" என்றதோர் ஆங்கிலப் பழமொழியுண்டு. தன்னயங் கருதாமை நிரம்பிய இடத்தில்மட்டுமே பரிசுத்த அன்பு திகழ்ந்து விளங்கவல்லது. எல்லா உயிர்களும் ஒன்றே என்ற பெரிய உண்மைத் தத்துவத்தை யுணர்ந்தவனுக்கு அச்சம் இருக்க இடமில்லை. பிற உயிர்களிடத்து அன்பு காட்டாது, வெறுப்பு அடையும் மனிதன் அச்சத்தினால் அனவரதமும் அவதிப்படப் பிறந்தவன். பரிசுத்தமான அன்பும் ஜீவகாருண்யமும், தன்னயங் கருதுதலை விரட்டியடிக்கும் சாட்டைக்கோல்கள். தன்னயங் கருதாது பிறர்நலனையே நாடி உழைப்பவனுக்கு அச்சம் எப்படி ஏற்படும்? பிறருக்கு நன்மை விளைவிக்கும் சேவையை நாடித் தொண்டாற்றிவருகையில் தன்னைப்பற்றி நினைக்கப்பொழுதெங்கே? சிறிது அவகாசங்கிடைத்தால் கடவுளைத் தியானித்து மேன்மேலும் தொண்டு புரிய சக்தியைத் தருமாறு பிரார்த்திப்பான். தன்னயமும், தன்னலமுமே நாடி உழைப்பவனுக்குத் திரவிய லாபம் கிட்டலாம், பணம் அளவுக்கு மிஞ்சிச் சேமித்து வைத்தலால் இன்பமுண்டாகலாம், ஆனால் எப்பொழுதும் இடைவிடாத மனக்கிலேசமும், பயமும் மேலெழுந்து வாழ்க்கையை வியாகுலப்படுத்தும். நண்பர்களின் நாட்டமும், உறவும் இரா. முதுமையில் அன்பு ஆதரவு அற்று நலிவுறவேண்டி வரும். இது அனுபவ சித்தமான விஷயம்.

ஆத்ம சொரூபத்தையும், ஆத்ம ஞானத்தையும் நாடியடைந்தால் அச்சத்திற்கு இடமில்லை. தன்னயம், தன்னலம் என்ற பதங்களுக்கும் புகல் இல்லை. தாய் மடியிலுள்ள வரையில் சிசுவிற்கு எவ்விதமான கவலையும், பயமுமில்லாது இன்ப நிலையிலேயே மகிழ்ச்சியுடன் துள்ளி விளையாடுவதேபோல், நிலையற்ற சுகபோகங்களையும் அவற்றை நாடித் திரிவதில் உண்டாகும் அச்சமுறும் நிகழ்ச்சிகளையும் மனதிலேயே நினையாது ஈசுவரத் தியானமாகிய தாயாரின் பால் சுரப்பையே நாடிப் பருகி வரும் ஆத்ம ஞானி, ஆத்ம சித்தியடைவதில் ஐயமுமுண்டோ?

முற்றிற்று.

# நம்பிக்கையும் அர்ப்பணமும்

— மொழிபெயர்ப்பு—விசாகர் —

சுவாமி ஸ்ரீ இராமதாஸ் அவர்களின் ஆங்கில நூல்களிலிருந்து திரட்டிய [Guide to Aspirants] என்னும் நூலின் மொழி பெயர்ப்பு.

நம்பிக்கை என்றால் என்ன? கடவுள் இச்சைக்குப் பூரணமாய்ச் சரண் புகுதலே நம்பிக்கை. என்னதான் நேரினும் கடவுள் செயலென மதித்தல். பெரியன், நல்லன், அன்பன் எனக் கடவுள் கொள்ளப்படுகிறார். அவரே எல்லாவற்றையும் அளிப்பவர். நன்மையும் அன்பும் கருணையும் நிறைந்த உள்ளத்தில் இருந்து சகல விஷயங்களும் இயக்கங்களும் மாற்றங்களும் வருவதால், அதிருப்திப்படவோ, துக்கப்படவோ கிலேசப்படவோ அஞ்சவோ ஒன்றுமில்லை. எல்லாம் அவன் செயலே. ஒற்றுமைக்கும் அன்பிற்குமே அவன் சதா உழைக்கிறான். ஆகவே எல்லாப் பொருள்களின் உள்ளத்திலும் நிகழ்ச்சிகளிலும் அவனே இருந்து செயல் புரிகிறான். இந்நம்பிக்கை எமதாகும்போது, கடவுள் எமது என்றுந் தவறிலாத தோழனும் துணைவனும் நண்பனும் ஆகிறான். அவனிச்சைப்படியே சகல கருமங்களையும் செய்கிறோம். அதாவது அவனின் தூண்டுதலினாலே, இந் நிலையில் சகல ஐயங்களும் அச்சங்களும் அழிந்து முழுச் சாந்த பரமானந்தமாகிய ஒரு சுதந்தர நிலையை அடைகிறோம்.

ராமனிச்சையே மேன்மையானது. அந்த இச்சையை வணங்கு. எதுவரினும் அதை இராமனே செய்கிறான். அவன் செய்வதெல்லாம் நன்மைக்கே. ஏனெனில் ராமன் தயாபரன் அன்பன். எப்போதும் நன்மையையே ராமன் கருதுகிறான்.

உலக நியதிகள் எல்லாவற்றையும் நடத்துவோனும் அதிகாரிப்போனுமாகிய கடவுளின் இச்சைக்கும் செயலுக்கும் அமைதியாய்ப் பணிதலே மனத்தைச் சம நிலையில் வைப்பதற்கு ஏற்ற மருந்தாகும்.

எவ்வித புறச் சந்தர்ப்ப நெருக்கத்திலும் உனது சமநிலையை இழக்கவேண்டாம். தென்றலில் மேகம்போல அவை வந்து போவன. உனது மாறுபடாத நித்திய நிலையாகிய பாறையின் மேல் உறுதியாக நில்.

மனம் இறைவனோடு இணைக்கப்பட்டிருக்கும்போது புறநிலைகள் எவ்வளவு அனுகூலமில்லாதிருப்பினும் அவை எம்மைப் பாதிக்கா. கூடிய அல்லது குறைந்த அளவில் கஷ்டமான சந்தர்ப்பங்களும் ஏமாற்றங்களும் சச்சரவுகளும் எல்லோருக்கும் சமமாக வருகிறது. எல்லாச் சந்தர்ப்பத்திலும் கலங்காது அமைதியோடு இருத்தலே மேன்மை. மனதை எப்போதும் இறைவனில் இருத்தி, எல்லாச் செயல்களையும் அவனுக்கு அர்ப்பணித்திருக்கும்போதுதான், இப்பேறு சாத்தியமாகிறது.

வடிவமைப்பிலா கல்லொன்று உளியினால் பலமுறை செதுக்கப்பட்டபின்பே, போற்றுதற்கும் வணக்கத்திற்கும் உரிய அழகான விக்கிரகம் ஆவதுபோல, அலங்கோலமான அமைதி இல்லாத வாழ்வு பலசோதனைகட்கும் வருத்தத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளான பின்பே பெரும் மாற்றம் பெறுகிறது. போற்றுதற்கும் பூசித்தற்குமுரிய நித்திய பிரகாசத்திற்கும் இன்பத்திற்கும் அஞ்ஞானத்தில் இருந்து மாற்றப்படுகிறது.

சென்றதை சிந்திக்கவேண்டும். நடந்தவை எல்லாம் நன்மைக்கே. ஆனபடியால் அதைப்பற்றிய எண்ணத்தை எடுக்கத் தேவையில்லை. எதிர்காலத்தைப்பற்றிய எண்ணத்தையோ கிலேசத்தையோ வைத்திருக்கவேண்டாம். உன்னையும் மீறி நடப்பவை நடந்தே தீரும். ஒவ்வொரு நிலையிலும் அடக்கத்தோடும் தன்மையோடும் இருக்க ஆயத்தமாயிரு. கவலையும் கிலேசமும் பொருள்களுடைய போக்கின் பாதையை மாற்றமுடியாது. நிகழ் காலத்தில் ராமனைமாத்திரம் நினைத்து எல்லாக் கருமங்களையும் அவனுக்கு நிவேதனமாக்கு.

# நாம் பிறந்ததன் பயன்

[வல்லிபுரம்

1 கடவுள் நீதிபதிபோல் உயிர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தக்கபடி தண்டனை விதிக்கிறார். உயிர்கள் தங்கள் பாவம் நீங்கும்வரையும் பிறவி எடுத்தே தீரவேண்டும். உலகில் தோன்றும் உயிர்கள் முன்செய்த பாவம் நீங்கும்வரையும் கஷ்டம் அனுபவித்தே தீரவேண்டும். பிற உயிர்களிடம் அன்பு வைத்தலே பாவ விமோசனத்திற்குச் சிறந்த வழியாகும்.

2 கடவுளுக்குச் சாதிசமயம் இல்லை. எல்லா உயிர்களும் அவருடைய பிள்ளைகளே. பிதா பிள்ளைகளிடம் உள்ள சகோதர வாஞ்சையைக் காணும்போது எப்படி மகிழ்ச்சி அடைகிறாரோ அதேபோலக் கடவுள் உயிர்களிடம் உள்ள ஒற்றுமையையும் சீவகாருண்யத்தையும் கண்டு இன்புறுவார்.

3 இந்த உடலானது அதில் இருக்கும் உயிர் முன்செய்த பாவம் நீங்கும்வரையும் இருந்து கஷ்டம் அனுபவிப்பதற்காகக் கடவுளால் கட்டப்பட்ட ஒரு மறியற்சாலை. அந்த உயிர் அனுபவிக்கும் கஷ்டமும் உடலில் இருக்கும் காலமும் முன்செய்த குற்றங்களுக்குத் தக்கபடி கூடியும் குறைந்தும் இருக்கும்.

4 இந்த மறியற்சாலையிலிருந்து உயிர் வெளியேறாதபடி காற்றாகிய காவல்காரன் காவல்புரிகின்றான். உணவாகிய எசமான் வேலைவாங்குகின்றான். (நாங்கள் சாப்பிடும் சாப்பாட்டுக்குத் தக்கபடி வேலைசெய்தே தீரவேண்டும். அதனால்தான் நாங்கள் உலகில் கஷ்டம் அடைகிறோம்.) தண்ணீராகிய தோழன் உதவி புரிகிறது. (தண்ணீர் உணவின் சத்தைப் பெருக்கி இரத்தோட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது.) அதனால் உயிர் ஆறுதல் அடைகிறது. (இரத்தோட்டம் குறைந்தால் உயிராகிய மறியற்காரன் சோம்பலாய் இருக்கிறான் என்று நினைத்துக் காற்றாகிய காவற்காரன் தேடிப் பார்க்கிறான். அதனால்தான் சில வேளைகளில் எங்கள் உடலில் வாய்வோட்டங்கள் தென்படுகின்றன.) இது உயிருக்குத் தொந்தரவைக் கொடுக்கும்.

5 மறியற்காலம் முடிந்தவுடன் காவற்காரன் உயிரை வெளியேற உத்தரவு கொடுப்பான். புண்ணியஞ் செய்த ஆத்மாக்கள் தங்கள் சொந்த வீடாகிய மோட்சத்துக்குப் போய்விடுகின்றன. பாவஞ் செய்த உயிர்கள் வெளியேறத் தயங்குவதால காவற்காரன் வெளியே பிடித்துத் தள்ளிவிடுகிறுன். அதனுலேயே சில உயிர்கள் சந்தோஷமாகப் பிரிவதும், அநேக உயிர்கள் அவஸ்தைப்பட்டுப் பிரிவதும், எம் கண்களால் கண்ட உண்மை.

6 உயிர்கள் இவ்வுடல்களில் புகுமுன் தாங்கள் இம்மறியற்சாலைகளில் எவ்வளவு காலம் சீவிக்கவேண்டும் என்பது அறிந்திருக்கக் கூடும். ஆனுல் பிறவி எடுத்தவுடன் குடிகாரன்போல் தங்கள் நிலையை மறந்து உலக மாயையில் அகப்பட்டுச் சந்ததியைப் பெருக்குகின்றன. இதனுல் புது மறியற்சாலைகளைக் கட்டும் தொழிலில் கடவுளுக்கு உதவிபுரிகின்றன.

7 கடவுள் தனக்கு மறியற்சாலைகளைக் கட்டுவதற்கு உதவி புரிந்தவர்களிடமே அதில் அடைக்கும் குற்றவாளிகளை ஒப்படைக்கிறுர். ஆதலால் பெற்றோரே தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் விடுதலைக்கு உதவிபுரிய வேண்டியவர்கள். நேரத்துக்கு நேரம் உணவு கொடுத்தால்மாத்திரம் போதாது. இம் மறியல் வீட்டிலிருந்து வெளியேறிச் சொந்த வீடாகிய மோட்சத்துக்குப் போகும் மார்க்கங்களைப் படிப்படியாக அறியச் செய்வதே அவர்களின் பிரதான கடமை. அவ்வுதவியைச் செய்ய முடியாத பெற்றோர் தகுந்த குருவைத் தேடி அவரிடம் ஒப்படைத்துவிடவேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகட்குச் சன்மார்க்க நெறியை அறியும் வழியைக் கற்றுக்கொடாராயின் அவர்கள் பிள்ளைகளைப் பெற்றதனுலாய பயனென்?

8 இப்பிறவி நாம் முன்செய்த குற்றங்களுக்காக அனுபவிக்கும் மறியற் காலம். இனியாவது விடுதலை அடைய விரும்பினுல் சீவகாருண்யத்தைக் கைக்கொண்டு கடவுளின் அன்பைப் பெறவேண்டும். நாங்கள் இரக்கமின்றி உயிர்களை வதைக்கும் போது, அவைகள் சென்று தங்கள் பிதாவாகிய கடவுளிடம் முறையிடுகின்றன. அவர் அதை முறைப்படி பதிந்துவைத்து, நாங்கள் இம்மறியற்சாலையிலிருந்து எங்கள் சொந்த வீட்டிற்குப் போனபின் கூப்பிட்டு, விசாரிக்கிறுர். அதனுல் குற்றத்துக்குத்

தக்கபடி தண்டனை விதிக்கிருர். அத்தண்டனை இதில் குறைந்தும் இருக்கலாம் சில சமயங்களில் குற்றத்துக்குத் தக்கபடி கூடியும் இருக்கலாம்.

9 உயிர்கள் தங்கள் சொந்த வீட்டுக்குப் போகும்போது இன்னெருவர் அவைகளைக் கட்டி இழுத்துச்செல்ல வேண்டிய தேவை இல்லை. அதனுல் இயமன் பாசக் கயிற்ருல் கட்டி இழுத்துச் செல்வதென்பது நம்பத் தகுந்ததாகத் தோன்றவில்லை.

10 சில உயிர்கள் மறியல் வீடுபோன்ற இவ்வுடலில் இருந்து படும் கஷ்டத்தைத் தாங்கமுடியாமல் களவாக வெளியேறிவிடுகின்றன. அதுவே தற்கொலை புரிதல். அவ்வுயிர்கள் கடவுளால் கொடுக்கப்பட்ட கட்டளையை மீறியபடியால் அவைகளுக்கு வீடாகிய மோட்சத்தில் இடம் கிடையாது. அதனுல் அவைகள் காலம் வரும்வரையும் அலைந்து திரிகின்றன. அவைகளே பசாசுகள். பிச்சைக்காரனும் தனக்குப் பயந்தவர்களைக் கண்டால் அடித்துப்பறிக்க விரும்புவதுபோல் இப்பசாசுகள் தங்களுக்குப் பயந்த உயிர்களுக்குத் தீங்கு செய்யமுயல்கின்றன காடையர்களுக்குக் குடியைக் கொடுத்து ஒருவரை அடிக்கச் செய்வதுபோல் இப்பசாசுகளை மந்திரத்தினுல் ஏவிப்பிற உயிர்களுக்குத் துன்பஞ்செய்விக்கலாம். பசாசுகள் பாவஞ்செய்த ஆத்மாக்களே. அவைகள் காலமுடிவில் கடவுளால் அழைக்கப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றன.

11 பாவஞ்செய்யாத உயிர்கள் வீடாகிய மோட்சத்தை அடைந்து இன்பமாகக் காலங் கழிக்கின்றன. அவர்களையே தேவர்கள் என்று கருதுகிருர்கள். தேவர்களும் ஒருவருக்கொருவர் குற்றஞ்செய்தால் கடவுளால் தண்டிக்கப்படுவர். எங்கள் உடல்போன்ற மறியற்சாலைகளிலும் அடைக்கப்படுவர்.

12 பிற உயிர்களுக்குத் துன்பஞ்செய்யாது இயன்றளவு உதவிபுரிதலே மோட்சமாகிய சொந்த வீட்டைத் தேடும் வழியாகும். சீவகாருண்யம் இல்லையானுல் கடவுளின் அன்பைப் பெறுதல் முடியாது. உயிர்களிடம் அன்பில்லாதவன் கடவுள் வழிபாடு செய்வது உலகத்தை ஏமாற்றும் நோக்கமேயல்லாது கடவுளின் அன்பைப் பெறும் நோக்கம் அல்ல. சீவகாருண்யம் என்னும் பாசத்தால் கடவுளைக் கட்டி எங்கள் உயிரின் நோக்கத்தை நிறைவேற்றுவதே எங்கள் கடமையாகும்.

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்

இலங்கையின் பெரும்பாலான மக்களான பௌத்தர்கட்கும் சைவ சமயிகட்கும் நித்திய யாத்திரை ஸ்தலமாக இன்று விளங்குவது நயினார் தீவு. தென்னிலங்கையில் கதிர்காமத்திற்குரிய பழமையும் பெருமையும் இதற்குமுண்டு. இதன் பழைய பெயர் நாக தீபம். பகவான் புத்தர் தரிசித்த காலத்திலுள்ள நாமம் அதுவே. அக்காரணம் பற்றியே பௌத்தர்கள் இன்றும் அதனை நாக தீபமென்றே அழைக்கின்றனர். மணிமேகலை விஜயஞ்செய்தபோது அதன் பெயர் மணிபல்லவமாக இருந்ததாய் அறிகின்றோம். சிவபெருமானுக்கு தில்லை, அண்ணாமலை முதலிய பஞ்சலிங்க ஸ்தலங்களை அமைத்த முறையில், பராசக்திக்கு குண்டலினியோகத்திலுள்ள ஆறு ஆதாரங்களை உருவகப்படுத்தி அவற்றை விளக்கி நிற்க ஆறு ஸ்தலங்களை அமைத்த நமது ஆன்றோர்கள் நயினாதீவை மணிபூரகமாகப் பாவித்து, அதற்கு மணிபீடகம் என்ற திருநாமஞ் சூட்டியதாகவும் அறிகின்றோம். அதுவுமன்றி, சக்தி பீடங்கள் அறுபத்து நான்கனுள் இது ஒன்றே இலங்கையில் இருப்பதும் குறிப்பிடவேண்டிய விஷயமுமாகும்.

மாந்தரின் வருகையால் பரவிய புத்தமதத் தொடர்பில், தற்போதுள்ள வட மாகாண எல்லைக்குள் அடங்கிய பிரதேசம் முழுவதுமே நாகதீபமென அழைக்கப்பட்டது. இலங்கையைக் கொழும்பெனவும், இங்கிலாந்தை லண்டன் எனவும், ஈழத்தை யாழ்ப்பாணமெனவும், அழைக்கும்முறையில் தோன்றியதாகும் பிந்திய நாகதீபம் என்னும் பெயர். இந்த உண்மையை அறியாத ஆராய்ச்சியாளர் இன்னும் பழைய நாக தீபத்தைத் தேடி அலைகின்றனர். இன்றைய காரை நகரே பழைய நாக தீபத்துடன் நெருங்கிய தொடர்புற்றிருந்த அலிதீபமென்பதை அறிந்தால், நயினார் தீவே பழைய நாக தீபமென்பது தெற்றென விளங்கும்.

அங்கேயுள்ள தேவி ஆலயம் புராதன மகிமையுடையது. ஆகமசாஸ்திர, சிற்பசாஸ்திர விற்பன்னர்கள் அங்குள்ள மூல ஸ்தான விக்கிரகத்தின் அமைப்பு ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டு

சிவமயம்

# ஓம் நமோ நாராயணாய

[ ஸ்ரீ சுவாமி சிவானந்தர் ]

தெய்வநெறிச் செல்வர்களே!

நீங்கள் பெரியோர்களையாவது, உங்கள் நண்பர்களையாவது காணும்போதும் அவர்களைவிட்டுப் பிரியும்போதும் அன்போடு ஓம் நமோ நாராயணாய என்று சொல்லி இரு கையையும் குவித்து வணங்கி அவர்களின் மனமகிழ்ச்சியையும் இறைவன் திருவருளையும் அடையுங்கள். நீங்கள் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் தப்பிலும் முடிவிலும் ஓம் நமோ நாராயணாய என்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தை எழுதுங்கள்.

ஒவ்வொரு மனிதரின் மார்புக் குழிக்கு உள்ளேயும் சற்று இட துபுறமாக அவரவர் கைமுஷ்டியளவு ஒரு தசைத்துண்டம் உள்ளது அதற்கு இருதயம் (Heart) என்று பெயர். அது இரத்தம் நிறைந்துள்ள நான்கு அறைகளையுடையது. இருதயத்தை நான்கு அறைகளாகப் பிரிக்கும் இரண்டு தசைச் சுவர்கள்—போல இருக்கின்றன. இந்த இரண்டு தசைச் சுவர்களும் சேரு கின்ற இடத்தில் நடு மத்தியில் மிகவும் சிறியதாக ஓர் இடை

---

களைச் சேர்ந்ததாகவும், உற்சவ விக்கிரகம் பதினைஞ்சாம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும் கணிக்கின்றனர். மிகுந்த அழகும் சாந்நித்தியமும் பொருந்திய இந்த உற்சவ விக்கிரகம் தேஜோமயமாக விளங்குகிறது. அதின் பூரண சோபையைக் கண்டின்புறவிரும்புவோர், அங்கே ஆனி மாதத்தில் நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளன்று அம்பாள் தேரில் எழுந்தருளுங் காட்சியைப் பெறவேண்டும்.

இங்கு ஆலயத்தின் விமானங்களுங் கோபுரமும் மண்டபமும் இப்போது புதுக்கி அமைக்கப்பட்டுவருகின்றன. தென்னிந்தியாவில் புகழ்பெற்ற திரு. ம. செல்லக்கண்ணு ஸ்தபதியாரின் மேற்பார்வையில், தஞ்சாவூர், சிதம்பரம் முதலாய இடங்களிலிருந்து அழைக்கப்பட்ட சிற்பவேலைக்காரர்களால் மூலஸ்தானத்தின் மேல் அமைக்கப்படும் புதிய இரு நிலை விமானத்தின் படம் இந்த மாத 'ஆத்ம ஜோதி' யின் அட்டையை அலங்கரிக்கின்றது. இத்திருப்பணி வேலை சித்திரை மாதத்தில் முடிவாகி அதே மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

வெளியுண்டு. அதுவே மனிதனின் நடு மத்தியப் புள்ளி. அந்த இடைவெளிக்கே சிதம்பரம் என்று பெயர். அங்கேதான் எங்கும் நிறைந்த பரமாத்மாவின் அதிகமான சக்தியிருக்கிறது. அந்த சக்திதான் மனத்தையும், மூளையையும், நாடிநரம்புகளையும், உடலையும், உயிரையும் அசைத்து ஆட்டி வேலைகள் செய்யச் செய்கின்றது. ஆதலால் அங்குள்ள பரமாத்மாவே நடராஜா. அந்தச் சிதம்பர இடைவெளியில் சிறிது தண்ணீரும் இருக்கின்றது. அந்தத் தண்ணீருக்கே பாற்கடல் என்று பெயர். அந்த நீருக்கே 'நார" என்று பெயர். "நார" என்பதில் இருப்பதால் அந்த நடராஜாவுக்கே நாராயணர் என்றும் பெயர். ஆதலால் நாராயணர் என்றால் நடராஜா. நடராஜா என்றால் நாராயணர். நாராயணர், நடராஜா எனப்படுவது பரமாத்மா, பிரம்மம். கடவுள். இதனாலேதான் பூமியிலுள்ள சிதம்பரத்திலும் ஒரு இரகசிய ஆகாய அறையை ஏற்படுத்திக் கடவுளை நடராஜ வடிவமாகவும் நாராயண வடிவமாகவும் செய்து வைத்திருக்கின்றார்கள்

இன்னும் "நார" என்றால் மனிதன். நார என்றால் எல்லா மனிதரும் ஆகும். ஆதலால், எல்லா மனிதருக்குள்ளும இருக்கின்ற பரமாத்மாவுக்கு நாராயணர் என்று பெயர்.

சிவஞான முனிவர் மாபாடியத்தில் எல்லா உயிர்த் தொகுதியையும் ஒத்து நிற்பதால் சிவனுக்கே நாராயணர் என்று பெயர் என்று எழுதியிருக்கிறார்.

"ஓம் நமோ நாராயணாய" என்றால் மனிதருக்கு உள்ளே இருதயத்தின் நடுவில் உள்ள நீரில் இருந்துகொண்டு உடல், உயிர்களை யெல்லாம் இயங்கச்செய்யும் பரமாத்மாவிற்கு நமஸ்காரம். என்று அர்த்தமாகின்றது.

ஆதலால் எந்த மனிதரை வணங்கும்போதும் ஓம் நமோ நாராயணாய என்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லி வணங்குவீர்களாக. இந்த மந்திரத்தின் விரிவான பொருளையெல்லாம் அறிய விரும்பினால் "அஷ்டாக்ஷர தீபம்" என்னும நம் நிலைய வெளியீட்டில் பார்க்கவும். நாராயணர் உங்கட்கு ஞான வைராக்கியச் செல்வங்களை அருளி இம்மை மறுமை இன்பங்களை எய்துவிப்பாராக!

ஓம் நமோ நாராயணாய.

# கண்டி, சாது ஸ்ரீபீர்பாவா அவர்களின்
## அருள் வாக்கியங்கள்

4 சுத்தமாக்கப்பட்ட மனம், இறைவனிற் பதிந்த மனம், இதனிலும் மேலான பரிசுத்த ஆலயம் ஒன்றுமில்லை. மனமானது இறைவனிற் பதிந்திருக்கும்பொழுது அந்த மனம் பிரகாசமான உபசாந்த வடிவாக இருக்கும் இந்த நிலையைப் பெற்றுக் கொண்ட மனம், ஆனந்தமாகிய சுகவடிவாக நிறைந்திருக்கும் ஏக நிலையாகிய நிர்க்குணம்.

5 இப்படி உபசாந்தமான பரிசுத்த நிலையில் தனது யதார்த்த ஆத்ம தரிசனை உதயமாகின்றதும் தன் உண்மை நிலை தானேதானாய் நித்தியப் பொருளாயுள்ள திருவருட்பிரகாசமாகும்.

6 தியான வழியில் மனம் சலனமற்றபொழுது, ஆத்மா தனது சுயம்பிரகாசத் தன்மையின் பொருட்டு, அறியாமை, பயம், விசனம், மரண பயம் முதலிய குணசுபாவத்தை நசித்துவிடும். அது தியானவழி என்னும் நித்தியத் தெய்வீகத்தின் தன்மையாகும்.

7 உன்னை உன்னுக்குள் ஆழச்செய்யும் வழியாகிய தியான வழியில் முழு உள்ளத்தோடு மூழ்கு. தெய்வத் தன்மை ஆபரணமாகவும் அங்கவஸ்திரமாகவும் சூழ்ந்துகொள்ளும். நீ நித்திய சுக ஜீவியான என்றுமுள்ள நித்திய ஆன்மாவாக இருக்கின்றாய்.

8 மழைத்துளி ஒரே மாதிரி எல்லா இடங்களிலும் பெய்தாலும் அந்தந்த இடத்தின் நிறத்தில் மாறிவிடுகிறது. இடத்தின் வேற்றுமையே தவிர மழையில் வேற்றுமையில்லை. தெய்வீக அம்சம் யாவற்றிற்கும் பொதுவாக இருப்பினும் அவரவர் மனதிற்கிசைந்தபடி கருமங்களை முடித்துக்கொடுக்கிறது.

## — செய்தித் திரட்டு —

சிவராத்திரி தினம் :— இத்தினம் நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கம் மாவத்தகம சைவ மகா சபை, கொம்பனித்தெரு சிவசுப்ரமணிய சுவாமி கோவில், கொழும்பு சத் சங்கம் ஆகிய இடங்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸதேவர் 116-வது ஆண்டு விழா நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கம் அக்கரைப்பற்று இராமக் கிருஷ்ண வித்யாலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்யாலயம் ஆகிய இடங்களில் கொண்டாடப்பெற்றது.

3—3—51-ல் கண்டிச் சைவ மகா சபை இருபத்து ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது.

## ... பொன் மொழிகள் ...

—[சின்னத்தம்பி]—

[கிருபானந்தவாரி அவர்களின் பிரசங்கங்களிலிருந்து திரட்டியவை]

சிறுவர்களே ! நீங்கள் வருங்காலத்தில் சிறப்படைய வேண்டுமாயின் அருச்சுனனைப்போல் ஊக்கமும், சுறுசுறுப்பும் உள்ளவர்களாகக் குரு நம்பிக்கையுடன் கல்விகற்கவேண்டும். அருச்சுனன் "பெற்றோலைப்" போன்றவன். பெற்றோலுக்குத் தூரத்தே நெருப்பை வைத்தாலும் அது நெருப்பைத் தன்பால் இழுத்துப் பிரகாசத்தை உண்டாக்கிக் கொள்கிறது. பெற்றோலில் நெருப்பு மூட்டுவதாய் இருந்தால் எவ்வளவு இலகுவானது. தர்மர், வீமன், நகுலன், சகாதேவன், அசுவத்தாமன் ஆகிய இவர்கள் மண்ணெண்ணெய்க்குச் சமானமானவர்கள். நெருப்புப் பெட்டியில் குச்சியைத் தட்டி திரையில் வைத்தால்தான் நெருப்பு மூளும். துரியோதனன் முதலாய நூற்றுவரும் விளக்கெண்ணெய்க்குச் சமானமானவர். விளக்கெண்ணெயில் நெருப்பை மூட்டினால் சுடர் விழுந்து எரிகிற சுவாலையையே அவித்துவிடும். முதல்தரமான மாணவர் ஆசிரியர் முயற்சியில்லாமலே தாமாக உணர்ந்து கொள்கின்றனர். இடைத்தரமான மாணவர் சிறிது முயற்சியுடன் விஷயத்தை அறிந்துகொள்கின்றனர். மூன்றாவது பகுதியாருக்கு உணர்த்தப் புகும்போது ஆசிரியருடைய முயற்சியே தோல்வியடைகின்றது.

# ஆத்ம ஜோதி ஆயுள் சந்தா
## ஆதரவாளர்கள்

திரு. க. இ. கந்தையா—கும்பாவிளை தோட்டம், பூண்டுலோயா.
திரு. R. பாலசுப்ரமணிய ஐயர்—வட்டுக்கோட்டை
திரு ச கயிலாய பிள்ளை — சரசாலை
திருமதி. அ. சி பொன்னு—நாவலப்பிட்டி
திருமதி. ட. குழந்தைவேலு—வெள்ளவத்தை

---

ஆத்ம ஜோதி அன்பர்களே!

நீங்கள் மாசம் 25 சதவீதம் வருடத்தில் கொடுக்கும் மூன்று ரூபா, ஆத்ம ஜோதி மூலம் எத்தனையோ அன்பர்களுக்கு தூய நினைவையும் ஆத்ம ஞானத்தையும் ஆத்மீக உணர்ச்சியையும் கொடுக்கிறது. வருடத்தில் ஆயிரக்கணக்காக உழைத்து அதனிலும் மேலாகச் செலவழிக்கிறோம். அதில் ஒரு மூன்று ரூபாவை ஆத்ம ஜோதிக்கென மனமுவந்து அனுப்பி வைத்தால் நல்ல காரியமொன்று கஷ்டமில்லாது நடப்பதை நீங்கள் கண்ணாரக் காணலாமல்லவா? சோதி அபிமானிகள் முதலில் தங்கள் பணத்தை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இந்திய அன்பர்கள் பணம் அனுப்பும்போது கடிதம் ஒன்றும் தவறாது நிலயத்திற்கு அனுப்பவேண்டுகிறோம். கடிதம் வராவிடில் யார் பணம் அனுப்பினர்கள் என்பது அறியமுடிவதில்லை.

---

## கலிமாவின் காதல்

காதல் என்பது உள்ளன்பின் பெருக்கம்; ஆண் பெண் காதல் வாழ்வின் துடிப்பு, உலகம காதல் வனம். அதில் ஆண் பெண் இயற்கை எப்படி விளையாடுகிறது-இந்த உலகில் காதலர் எப்படி மனமொன்றி வாழவேண்டும்? இந்தக் கேள்விகளுக்குப் பதிலே இந்நூலிலுள்ள கதைகள்.

எழுதியவர்:— யோகி சுத்தானந்த பாரதியார்.

விலை ரூபா ஒன்று.

கிடைக்குமிடம்:— சுத்தானந்த நிலயம் — புதுக்கோட்டை.

Registered at the G. P. O. as a News Paper No. H. C. 59/300.


## ஸ்ரீ ராமக் கிருஷ்ண விஜயம்

[1921-ம் ஆண்டிலிருந்து வெளிவருகிறது.]

- தமிழ் நாட்டில் தமிழ்மொழியில் தமிழ்மக்கட்கெனச் சமயத் தொண்டுபுரியும் மாதப் பத்திரிகை.
- பண்டிதரும் பாமரரும் இன்புறக் கூடியது.
- பேரன்பு, மெய்யறிவு, துறவு, ஆற்றல் சமரச நோக்கு, அன்பர்பணி முதலான உயர் நோக்கங்களை வாசிப்போரது உள்ளத்தில் எழுப்புவது.
- சமயப்பூசல், சாதிவேற்றுமை, மனச்சோர்வு, காம காஞ்சன ஆசை முதலிய அழுக்குகளை எரிக்கும் ஞானக் கனலைத் தருவது.
- சாதன முறைகளின் விளக்கம், ஞானக்கதைகள், பெரியோரின் சம்பாஷணைகள், வரலாறுகள் முதலியன.
- ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசுவாமி விவேகாநந்தர்—இருவரது இனிய மொழிகளையும் புகட்டுவது.

சந்தாதாரர்க்குப் பல புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும். வருடச் சந்தா ரூ. 3 - தனிப்பிரதி அணா 6.

ஒவ்வொரு தொகுதியும் தை மாதத்திலிருந்து தொடங்குகிறது. சந்தா, தை, அல்லது ஆடி மாதத்திலிருந்து தொடங்கலாம்.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீராமக்கிருஷ்ண மடம், மைலாப்பூர், சென்னை.

## சமூகத்தொண்டன்

யாழ்ப்பாண பகுதிச்சன சமூக நிலைய சமாஜத் திங்கள் வெளியீடு

விடிவெள்ளி உதயம் செய்துவிட்டால் பூமியைப் பிடித்திருந்த இருள் நீக்கப் போகிறதென்பது அறிகுறி. அதேபோல் சமூகத்தொண்டு சுயநல இருளால் மறைக்கப்பட்டிருக்கிறது. அவ்விருளை விடிவெள்ளியை ஆசிரியராகக்கொண்ட சமூகத்தொண்டன் நீக்கி சூரியன்போல் மக்கள் மத்தியிலே விளங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். வருட சந்தா ரூ 2.

சமூகத்தொண்டன் காரியாலயம், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.


கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி. இலங்கை

அச்சுப்பதிப்பு: சரவண அச்சகம், நாவலப்பிட்டி 14—3—51